உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்


Vol. 4 | December 1941 & January 1942 | No. 1


விஷய ... பக்கம்


| | |
|---|---|
| நமது பத்திரிகை (பத்திராதிபர்) | 1 |
| சென்னை சர்க்கார் உத்திர... | 1 |
| ஸங்கோதம் (பத்திராதிபர்) | 2—4 |
| ஹிருதயரோக விசாரம் (வடவனூர் டாக்டர் V. N. ... அவர்கள்) | 5—20 |
| சித்தர்முறை (பண்டிட் நாராயணய்யங்கார்) | 21—24 |
| திராவிட வைத்தியமண்டலம் ஸ்தாயிஸமிதியின் தீர்மானங்கள் (காரியதரிசி) | 25 |
| திருச்சி ஆயுர்வேத ஸபா (காரியதரிசி) | 25 |



8 - JAN 1942



**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு | ரூ 8 |
| ,, ,, ½-க்கு | ரூ 4 |
| ,, ,, ¼-க்கு | ரூ 2 |

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
... Police Station West Lane, Madura.

[விலை 0—3—0

வைத்திய சந்திரிகா [illegible] மூன்று வருஷங்கள் நிறைந்து தத்காலம் நான்காவது வருஷம் ஆரம்பமாகியுள்ளது. யுத்த நிலைமை முன்னிட்டுச் செல்வாக்குள்ள பல ஆங்கில பத்திரிகைகளும் பாஷா பத்திரிகைகளும் காகிதப் பஞ்சத்தாலும் விலையேற்றத்தாலும் திணரிக்கொண்டிருப்பது பலரும் அறிந்ததே. இந்நிலைமையில் நமது சந்திரிகையும் பல கஷ்டங்களை அனுபவித்து வருவது இயற்கையே. இவ்விதமிருந்தும் நமது சந்திரிகை பழைய மேனி குன்றாமல் இதுவரை வெளிவந்தது போல இனியும் வெளிவரும். இதுவரை ஆதரித்து வந்த நண்பர்கள் மேலும் ஆதரித்து நமக்கு உத்ஸாஹமளிக்க வேண்டுமென்று கோருகிறோம். காகிதப் பஞ்சம் தணிந்தவுடன் சரகம் என்ற வடமொழி நூலை நாகரலிபியில் மூலமும் தமிழில் விரிவான உரையும் சேர்த்து வெளியிட நினைத்திருக்கிறோம். இவ்விதமே சில ரஸ நூல்களையும் வெளியிடக் கருதியுள்ளோம்.

## ஓர் அறிக்கை.

வைத்திய சந்திரிகா ஒவ்வொரு வருஷமும் டிசம்பர் மீ த்தில் ஆரம்பமாகி நவம்பர் மாதத்துடன் முடிகிறது. இவ்விதம் இருப்பதில் டிசம்பர் மாதத்தில் முதல் சஞ்சிகை வெளிவருவதால் அதற்கு நெ. 1 என்று குறிப்பிட வேண்டியதாகின்றது. மாதமும் சஞ்சிகையின் நெம்பரும் வித்தியாசப்படுவதால் மாதத்துடன் சஞ்சிகை நெம்பரைப் பொருத்தி வெளியிட வேண்டுமென்பது பல நண்பர்களுடைய ஆவல். இந்தப் புது வருஷத்து சந்தாதாரர்களுக்கு ஜனவரி துடங்கி 12 சஞ்சிகைகளை மாதமும் சஞ்சிகை நெம்பரும் பொருந்தும்படி செய்து அனுப்புகிறோம். இவ்விதம் செய்வதால் முதல் மாத சஞ்சிகைகளை மறுமாதம் அனுப்புவது என்ற வழக்கத்தை விட்டு அந்தந்த மாத சஞ்சிகைகளை அந்தந்த மாதம் முதல் வாரத்தில் அனுப்புவதாக ஏற்படுகிறதென்பதைச் சந்தாதாரர்கள் கவனிக்கக் கோருகிறோம்.

பத்திராதிபர்.

---

## சென்னை சர்க்கார் உத்திரவு.

இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தின் பாடமுறை போதனை முறை பரீக்ஷை முறைகளைப் பற்றி விசாரித்து சிபார்சு செய்யும்படி சர்க்காரால் 1940ம் வருஷம் மே மாதத்தில் உஸ்மான் கமிட்டி நியமிக்கப்பட்டது. ஷை கமிட்டியால் 1941 ஞு ஜனவரி மீ 10உ யன்று

ஓர் யாதாஸ்து அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த யாதாஸ்தை சர்க்கார் ஏப்பிரல் மாதத்தில் பொதுஜனங்களின் அறிவிப்புக்காக வெளியிட்டனர். 1924ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ஷெ பள்ளிக்கூடம் ஆரம்பமாயிற்று. இதில் இந்திய வைத்திய முறைகளையும் நவீன வைத்திய முறைகளையும் சேர்த்து போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நவீன முறைகளை அதிகமாகப் போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. L I.M. பட்டத்தைப் பெறுவதற்கான ஐந்து வருஷ பாடத்தில் பாதி காலம் நவீன முறைகளைப் போதிப்பதில் தக்காலம் செலவிடப்படுகின்றது. மேல் நாட்டு வைத்திய முறையில் நல்ல கியானத்தை உண்டாக்கி இந்திய வைத்திய முறைப்படி தொழிலை நடத்துவதற்குத் தகுந்த முறையில் மாணவர்களுக்குப் போதனை செய்வதற்காகவே ஷெ பள்ளிக்கூடம் ஏற்பட்டதென்று கமிட்டி கருதியிருக்கின்றது. மேற்சொன்ன நோக்கம் உண்மையில் சித்திக்கக் கூடியதா இல்லையா என்ற பிரச்னையை விவாதிக்காமல் கமிட்டியார் பல திட்டங்களை சிபார்சு செய்திருக்கின்றனர். ஷெ திட்டங்களைச் சிபார்சு செய்ததற்குக் காரணங்களையும் நிறைவேற்றுவதற்குரிய மார்க்கங்களையும் தெரிவிக்காததால் சர்க்காருக்குக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இது பற்றிய பொதுவான பிரச்னைகளைப் பிரசித்தமாகத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக சர்க்கார் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதில் சுதேசி முறைகளுடன் நவீன முறைகளையும் போதித்து கியானத்தை வளரச் செய்வது சாத்தியமா என்பது முக்கியமான பிரச்னையென்று சர்க்கார் தெரிவித்திருந்தனர். இவ்விஷயமாக யோசனையோ சிட்டையோ இது வரையில் சர்க்காருக்குக் கிடைக்கவில்லை. இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் ஆயுர்வேதம், சித்தவைத்தியம், யூனானி, ஆகிய இவைகளைத் தான் போதிக்க வேண்டுமென்ற யோசனை வெளியிடப்பட்டது. இரு முறைகளையும் சேர்த்துப் பயிற்சி யளிக்கத் தெளிவான ஓர் திட்டம் ஏதுமில்லாமலிருக்கும் நிலைமையில் முன் சொன்ன யோசனையைத்தான் நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இந்திய வைத்தியப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு நவீன முறைகளைப் பற்றிய போதனை சரியாகச்

செய்யப்படவில்லை யென்று அனுபவத்திலிருந்து சர்க்கார் அறிந்திருக்கின்றனர். இப்பயிற்சியை யளிக்க ஓர் குறைந்த கால அளவுக்குள் ஏற்பாடு செய்ய மார்க்கம் ஏதுமிருப்பதாகச் சர்க்காருக்குப்புலப்படவில்லை. ஆகவே இந்திய வைத்திய முறைகளுடன் போதுமானபடி நவீன முறையையும் சேர்த்துப் போதிப்பது சாத்தியமாகுமென சர்க்கார் நினைக்கவில்லை. எனவே சர்க்கார் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் அடிப்படையான மாறுதல் எதையும் செய்வதில்லையென்று முடிவு செய்திருக்கிறார்கள் கமிட்டியார் சிபார்சு செய்துள்ள இதர திட்டங்களை எவ்வாறு நிறைவேற்ற முடியும் என்பதைப் பற்றி சர்க்கார் ஆலோசிக்க எண்ணியிருக்கின்றனர். என்று சர்க்கார் பிறப்பித்துள்ள உத்திரவில் கூறியிருக்கின்றனர்.

ஸந்நிபாதம். (பத்திராதிபர்)

வடமொழியில் ஸந்நிபாதம் என்ற பதத்தைத் தமிழில் சந்நி என்று சொல்லுகின்றனர். தமிழ் நூல்களிலும் சன்னி என்று கூறப்படுகின்றது. வாதபித்த ச்லேஷ்மங்களின் பிரகோபத்தால் காணும் நோய்களை ஸந்நிபாத நோய்கள் என வடமொழி நூல்களில் வர்ணிக்கப்படுகின்றன. பல நோய்கள் ஸந்நிபாத நோய்களாக சொல்லக்கூடுமாயினும் பொதுவில் ஸந்நிபாதம் என்றால் அது ஸந்நிபாதக் காய்ச்சலையே குறிப்பதாக வழக்கத்தில் வந்துவிட்டது. தமிழிலும் சன்னி என்பது சன்னிக் காய்ச்சலையே குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. எல்லா ரோகங்களுமே பொதுவில் கடினமானவையென இருந்தபோதிலும் ஸந்நிபாதக் காய்ச்சல் அவைகளுள் முதன்மை பெற்றதென அனுபவத்தாலும் நூல்களாலும் அறிகின்றோம். "ம்ருத்யுநா ஸஹ யோத்தவ்யம் ஸந்நிபாதப் சிகித்ஸதா" சன்னிக் காய்ச்சலை சிகித்சை செய்பவன் யமனை எதிர்த்துச் சண்டையிட வேண்டும் என்ற வசனம் இந்நோயின் கடுமையைக் காட்டுகின்றது. நோயாளியை மிக வருத்தியும் வைத்தியனைத் திடுக்கிடச் செய்தும் வருவது பற்றி இந்நோயையமன் எனக்கருதலாயினர். முதலில் சாதாரணக் காய்ச்சலாக ஆரம்பித்து பிறகு ஸந்நிபாத நிலையாகச் சில சமயங்களில் முதிர்ந்து வி[illegible] கின்[illegible] காய்ச்சல்களில் ஆரம்பத்திலேயே ஸந்நிபா[illegible] [illegible] வதில்லை. சாதாரணக் காய்ச்சல்களிலு

ஸந்நிபாதக் காய்ச்சல்களிலும் ஆரம்பத்தில் சில லக்ஷணங்கள் பொதுவாக விருப்பதால் ஆரம்பத்தில் பேதம் காணுவது கடினமாகின்றது. சில சமயங்களில் ஆரம்பத்திலேயே ஸந்நிபாத லக்ஷணங்கள் வியக்தமாகக் காணப்படுவதால் சுலபமாக நோயை அறிய முடிகின்றது. நவீன சாதனமாகிய கர்மாமீடர் இந்நோயில் அதிக உபயோகமாவதில்லை. அடி சாதனம் உஷ்ண அளவைக் காட்டுகின்றதேயன்றி ஸந்நிபாத வகையெனத் தெரிந்து கொள்ள உபயோகமாவதில்லை. எல்லா சன்னிபாதக் காய்ச்சல்களிலும் அதிக அளவு உஷ்ணமிருக்க வேண்டுமென்ற நியமமில்லை. அதிக உஷ்ணமிருப்பதெல்லாம் ஸந்நிபாதம் ஆவதுமில்லை. 101, 102, டிக்கிரி அளவுள்ள காய்ச்சல்களிலும் சன்னிபாதத் தன்மை காணப்படுகின்றது. நோயாளிக்கு மரணமும் சம்பவிக்கின்றது. 103, 104. அளவுள்ள காய்ச்சல்களும் ஒரு கோளாறுமின்றி இரண்டொரு தினங்களில் சௌக்கியமாகி விடுகின்றது. ஆகவே உஷ்ணத்தின் அளவைக் கொண்டு ஸந்நிபாதக் காய்ச்சலை நிர்ணயிக்க வழியில்லை. ஆகவே லக்ஷணங்களைக் கொண்டே முக்கியமாக இந்நோயை நிதானிக்க வேண்டியிருக்கின்றது. நாடி நடையைக் கொண்டும் ஓரளவு நிர்ணயிக்கலாம். ஸந்நிபாதக் காய்ச்சலுக்கு ஆங்கிலத்தில் பெயர் கொடுக்கப்படவில்லை. சாதாரணமாக Typhoid என்ற பெயரே இதற்கும் இடப்படுகின்றது. உண்மையில் Typhoidக்குஞ் சன்னிபாதத்திற்கும் சம்பந்தமே கிடையாது. ஆங்கிலத்தில் அழைக்கப்படும் டைபாயிடு என்ற காய்ச்சலை ஸந்ததம் என நமது நூல்கள் கூறுவதாகப் பல வியாசங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. காய்ச்சல் ஆரம்பித்து இரண்டொரு தினங்களிலேயே பல மரணங்கள் நேருவதைப் பலரும் அறிவர். இவைகளை டைபாயிட் எனச் சொல்லுவது பொருத்தமற்றது. ஆகவே நாம் ஸந்நிபாதமெனச் சொல்லும் காய்ச்சல்களனைத்தையும் டைபாயிடு என்றே ஆங்கில வைத்தியர்கள் சொல்லுவது நமது நூல்களுக்கும் அனுபவத்திற்கும் முற்றிலும் விருத்தம்.

ஸந்நிபாதங்களுக்குத் தகுந்த காரணங்களைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக விருக்கின்றது. இதே சிரமம் பல நோய்களிலும் இருக்கின்றது. லக்ஷணங்களைக் கொண்டு ஸந்நிபாதங்களை அறியக்

கூடுமேயன்றித் திரிதோஷப் பிரகோபங்களுக்குத் தகுந்த காரணங்கள் அறிய முடிவதில்லை. திரிதோஷப் பிரகோபங்களுக்குக் காரணம் நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. வாக்படர் ஸந்நிபாதங்களைச் சொல்லும் பொழுது ஸந்தத ஜ்வரத்திற்குச் சொல்லுவது போல மரணகாலம் அல்லது சமனகாலத்தைச் சொல்லவில்லை. சரகத்தில் ஸந்ததஜ்வரத்திற்குத் தனித்து காலம் சொல்லிப் பொதுவாக ஓர் வசனம் காணப்படுகின்றது. "ஸப்தாஹாத் வா தசாஹாத்வா த்வாதசாஹாத் ததைவ ச। ஸப்ரலாபப்ரமச்வாஸ: தீக்ஷ்ணோ ஹன்யாத் ஜ்வரோநரம்" வாதஜ்வரம் ஏழு நாட்களிலும், பித்தஜ்வரம் பத்து நாட்களிலும் கபஜ்வரம் 12 நாட்களிலும் மரணத்தை விளைவிக்கும். அக்காய்ச்சல்களில் பிதற்றல், கிறுகிறுப்பு, மூச்சுத் திணறல், இவைகள் சேர்ந்திருக்க வேண்டும். இந்த உபத்திரவங்கள் சேர்ந்திருந்தால் முன் குறிப்பிட்ட நாட்களிலும் அல்லது அதற்குக் குறைந்த நாட்களிலும் மரணம் நேரலாம் என்பது இவ்வசனத்தின் பொருள். இவ்வசனம் பொதுவாகக் காய்ச்சல்களில் மரணக் குறியை போதிக்கும் வசனங்களுக்கு நடுவில் இருப்பதால் இது பொதுவானதாகும். ஆனால் சுசுருதத்தில் வேறு விதமாகக் காணப்படுகின்றது. ஸந்நிபாதங்களை ஸந்ததஜ்வரமென்று சொல்லி மற்றொரு சாதாரண ஸந்ததஜ்வரம் விஷமஜ்வரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. விஷமஜ்வரங்களில் சொல்லப்பட்ட சாதாரண சந்தத ஜ்வரம் சுலபமாகச் சௌக்கியமாகக் கூடியதெனவும் சுசுருதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. "ஸப்தாஹம்வா தசாஹம்வா த்வாதசாஹமதாபிவா। ஸந்த்யா யோவிஸர்கீ ஸ்யாத் ஸந்ததஸ்ஸ நிகத்யதே" 7, 10, 12, நாட்கள் இடைவிடாமல் அடித்துச் சுலபமாகச் சௌக்கியமாகும் விடாக்காய்ச்சலுக்கு ஸந்ததமெனவும் இது ஸந்ததத்தில் ஓர் வகையெனவும் மேற்படி வசனத்திற்குப் பொருள். சன்னிக்குணங்களாகக் கருதப்படும் பிதற்றல் முதலியவை எதிர்பாராத விதமாகத் திடீரென விலகுகின்றன. இதின் பல பேதங்கள் பாவப்பிரகாசர், வைத்திய சிந்தாமணி, முதலிய நூல்களில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஸஹஸ்ரயோகம் மொழிபெயர்ப்பில் அதன் விரிவுகளைக் காணலாம். (ஸஹஸ்ரயோகம் பக்கம் 136, 137, 138, 139, இவைகளில் பார்க்கவும்) அடுத்த சந்திரிகையில் கூறுவோம்.

# ஹிருதயரோக விசாரம்.

வடவனூர் டாக்டர் V. N. நாயர் அவர்கள் 11வது திராவிட வைத்ய சம்மேளனத்தில் வடமொழியில் எழுதிப்படித்த வியாசத்தின் மொழிபெயர்ப்பு—நவீன பௌதிக சாஸ்திரங்களைக் கண்ணெடுத்துப் பாராமலும் குறைவின்றியும் இருக்கும் ஆயுர்வேதத்தை மாத்திரம் அத்யயனம் செய்துள்ள வைத்தியர்களுடைய ஹிருதயத்தை நான் மனதில் பாவனை செய்கிறேன். பல சாஸ்திரங்களின் தத்வங்களைக் கற்றறிந்து ஸபையில் அமர்ந்துள்ள வைத்ய சிரேஷ்டர்களே! இந்த திராவிட வைத்ய மண்டலத்தின் பத்தாவது ஸம்மேளனம் மதுரையில் நடைபெற்றபொழுது "ஸிராபஸ்தி" (Injection) என்ற விஷயத்தை பற்றி ஆயுர்வேத ரீதியில் விமர்சம் செய்து ஓர் உபன்யாசம் செய்தேன் என்பதை மண்டல அங்கத்தினர்கள் அனைவரும் அறிந்ததே. அனேகமாக எல்லா விடங்களிலும் பரவியுள்ள இன்ஜக்ஷன் முறையை அசாஸ்திரீயமெனத் தள்ளுவதா? சிகித்ஸையில் ஓரளவு உபயோகமிருப்பதால் அதை நாம் கைக்கொள்ளுவதா? என்ற விசாரம் அப்பொழுது உசிதமாக விருந்தது. இந்த 11வது ஸம்மேளனத்தில் சரகவாக்படாதி நூல்களில் பிராசீனர்களாயும் நவீனர்களாயுமுள்ள ஆசார்யர்களால் ஹேது, லிங்கம், ஔஷதம், இவைகளை நிரூபித்து நன்றாக வெளியிடப்பட்ட "ஹிருதயரோகம்" என்ற விஷயத்தைப்பற்றி ஓர் விசாரம் எதிர்பார்க்கப்படுகிறது. அது மாத்திரமல்ல. அந்த விசாரமும் என்னைக் கொண்டே எதிர்பார்க்கப்படுகிறது. நானோ அறிவுக்கெட்டாமல் மிகவும் ஆழ்ந்த பொருள்கள் அமையப்பெற்றுள்ள ஆயுர்வேத ரஹஸ்யங்களிலும் விஸ்தாரமாகவும் பல விதமாகவும் கிளம்பியுள்ள, நவீன பௌதிக வித்யைகளிலும் சற்றும் பரிசயமற்றவன். ஆகவே இதென்ன வீண் முயற்சி என இங்கு கூடியிருக்கும் நன்கு கற்றறிந்தவர் பலர் மனதில் ஓர் சந்தேகம் உதிக்கலாயிற்று. இந்த உபன்யாசகர் நூல்களை நம்பிப் படித்தறிந்தவை அபூர்ணமென நினைத்துத் தன் அஞ்யானத்தை வெளியிடுகிறாரா, அல்லது நவீன விஞ்யான கலைகளில் மயங்கி அதன் ஸ்வாதீனமாகி அதைத்தழுவி பேசுகிறாரா, அல்லது ஆயுர்வேத சூர்யனுடைய கிரண மண்டலத்தை மின்னொளி

போன்ற நவீன யுக்திகளால் தேடிக்கொண்டு தலை கீழாக நடக்கின்றூரா.(அதாவது பிரகாசமான சூரிய மண்டலத்தை மின்னொளியைக் கொண்டு தேடுவது எப்படி கேலிக்கூற்ரோ அது போல நவீன யுக்திகளைக் கொண்டு ஆயுர்வேத தத்வங்களை ஆராய்ந்து நவீன யுக்திகளுக்குப் பொருந்தும்படி தலை கீழாக அவ்விஷயங்களை மாற்றப் போகிரூரா என்பது பொருள்) அல்லது நவீன விக்யான நூல்களா கிற சூரியகிரணங்களால் கண்ணழிவுற்று, பொருத்தமாகவும் அழகியதும் சுலபமும் பெரியோர்களால் பரம்பரையாக ஆதரிக்கப்பட்டு வந்துமுள்ள மார்க்கங்களில் இடறுண்டு ஜனங்கள்சிரிக்கும்படி ஆகப் போகிரூரா என்ற இது போன்ற பல எண்ணங்கள் ஸபையோர் மனதில் இருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். இது இயற்கையே. ஆகவே அறியாத ஜனங்களின் உளரல்களைக் கேழ்ப்பதில் உலகத்தார் கொள்ளும் குதூஹலத்துடன் க்ஷண காலம் சாவதானமாக என் வார்த்தைகளைக் கேழ்க்க வேண்டுமென்று நான் தலை வணங்கி சபையோர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பண்டித சிகாமணிகளே! ரோக நிர்ணயத்திற்காகச் சொல்லப் பட்ட பல உபாயங்களில் "ஹிருதய பரீக்ஷை" என ஓர் பத்ததி புதிதாக இப்பொழுது காணப்படுகின்றது. தர்சனம், ஸ்பர்சனம், ப்ரச்னம், என்ற முறைகளைக் காட்டிலும் இப்புதிய முறை வேறு பட்டதுபோல எண்ணப்படுகின்றது. இம்முறையை ஆங்கில வைத்தியர்கள் மாத்திரமல்ல. சுதேச வைத்தியர்களுமே ஆதரிக் கின்றனர் என்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. ஒலிக்குழல் (Stethoscope) ஆங்கில நூல்களில் பிறந்தது. இதை சுதேச வைத்தியர்கள் இக்காலத்தில் ஸ்வீகரித்துத் தங்கள் படிப்பை முடித்துக் கொண்டு தொழிலில் புகுகின்றனர். நோயாளிகளும் ஒலிக்குழலை கைகளில் அலங்காரமாக தரித்துக் கொண்டு வரும் வைத்தியனைப் பார்த்துத் தங்களுக்கு வியாதி நிக்ரஹமே ஓர் உருவெடுத்து வந்திருப்பது போல நினைக்கின்றனர். ஒலிக்குழலின் மகிமை தலை மீறிவிட்டது விந்தையே. பலர் பல விதமாக இதன் பெருமையைப் பற்றி கட்டியம் கூறுகின்றனர். ஸகல அங்கப்ரத்யங் களுக்கு அவலம்பனமாயும், ஓஜஸ், ஸத்வம், முதலியவைகளுக்கு

இருப்பிடமாயும் இருக்கும் ஹிருதயத்தைப் பரீக்ஷிக்காமல் ரோக நிர்ணயம் செய்வது சரியல்லவென பண்டிதர்கள் நினைக்கின்றனர். ரக்தத்தை சரீரத்தில் வியாபிக்கச் செய்யும் யந்திரமான ஹிருதயத்தை ஆரோக்ய நிலைமையிலும் வியாதி நிலைமையிலும் நன்ருகக் கூர்ந்து கவனித்தால் தான் சரீரம், தாதுக்கள், இவைகளின் தத்வம் அறியப் படலாகுமென யுக்திவாதிகள் நினைக்கின்றனர். "நாடி பரீக்ஷை" என்ற பதத்தை நாடியால் செய்யப்படும் பரீக்ஷையெனப் பொருள் படுத்தி ஒலிக்குழல் பரீக்ஷையும் நாடி பரீக்ஷையில் நமது முன்னோர்கள் அடக்கி விட்டனரென்றும் ஆகவே தர்சனம், ஸ்பர்சனம், ப்ரச்னம், என்ற மூன்று உபாயங்களால்உபலக்ஷிதமாகி நோயாளியின் சரீர அவயவங்களில் உண்டாகும் சப்தங்களைப் பரீக்ஷித்தல் என்ற உபாயமும் சாஸ்திர சம்மதம்தான் என சாஸ்திர பராதீனர்கள் திருப்திப்படுகின்றனர். அந்தந்த காரியங்களுக்குத் தகுந்த உருவமுள்ள யந்திரங்கள் சாஸ்திர சம்மதமானவை யாகையால் அந்தந்த தேசகாலங்களுக்கு ஏற்ற விதத்தில் எல்லா கலைகளிலுமே அவைகளைச் சேர்த்து நித்தியமைப்பது அவிருத்தமென சிலர் இந்தஒலிக்குழலை ஸ்வீகரிக்கின்றனர். இவ்விதம் பலரால் பலவிதமாக அவரவர் புத்திக்குத் தக்கப்படி போற்றப்படும் இந்த ஒலிக்குழல் அனேகமாக சாஸ்திர சம்மதியாலும் யுக்திகதியாலும் சுலபமான உபயோகத்தாலும் மிகுந்த பலன் அளிப்பதாலும் பேதமின்றி ப்ராசீன நவீன வைத்யர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் "நான் ஜன்மமெடுத்தது ஸபலமெனக்" கருதி இந்த ஒலிக்குழல் "என் மேன்மை நிகரற்றது" என ரோகநிர்ணய வழிகளில் தான் சிறந்ததென வேஷம் போடுகிறது. ஆகையால் தான் ஆயுர்வேதம் விதித்த கோட்டை மயிரிழைகூட மீற மனம் சகியாதவரும், படித்தல், அறிதல், அனுஷ்டித்தல், பிறருக்கு போதிப்பித்தல், என்ற வழிகளால் ஆயுர்வேத சேவையைச் செய்து வருபவர்களாவும் உள்ள சில பெரியோர்கள் தங்களை போட்டோ எடுத்துக்கொள்ளும் சமயத்தில ஒலிக்குழலை கழுத்தில் மாட்டிக்கொண்டு இவ்விதம் தங்களை அலங்காரம் செய்து கொள்ளுகின்றனர். அதிகம் சொல்லுவானேன்? பல ரோகிகளை சிகித்சை செய்யும்பொழுது அவர்களின் ஒலிக்குழல் பரீக்ஷை பைத்தியத்தைப் பரிஹரிக்க நானே பல தடவைகளில்

நூலிக்குழலை உபயோகித்தேன் என்பது ரகஸியமல்ல. ஆகவே பிரம்மாண்டமாகப் போற்றப்படும் இந்த ஹிருதய பரீக்ஷையை எல்லோருமே செய்யவேண்டியது அவசியமென ஏற்பட்ட பிறகு பரீக்ஷிக்கத் தகுந்த ஹிருதயத்தின் ஸ்வரூபம், பரீக்ஷை முறை, பரீக்ஷையின் பலன், ஆகிய இவைகளை நவீநக் கொள்கையை ஒட்டி சாத்தியமான வளவு தெரிந்துகொள்ள வேண்டியதாகையால் இவைகளைப்பற்றிய ஆராய்ச்சி நமக்கு அவச்யமாக ஆகிவிட்டது.

ஆங்கிலக் கொள்கைப்படி ஹிருதயமும், அதன் ச்ப்தபரீக்ஷையும், ஹிருதய ரோகங்களும், அந்த அறிவால் உண்டாகும் பலன்களும்—தத்காலத்தில் சாரீர தத்வங்களை பிரத்யக்ஷத்தில் கண்டும், பரீக்ஷித்தும், பழகியும், உள்ள ஆங்கில வைத்தியர்கள் சரீர உறுப்புகளின் அதிலும் விசேஷித்து உள் உறுப்புகளின் இருப்பிடம், ஸ்வரூபம், தொழில், முதலியவைகளைப்பற்றி என்ன சொல்லுகின்றனரோ அதுதான் பிரமாணமென ஜனங்கள் நினைக்கின்றனர். ஆகவே நமது முன்னோர்களின் நூல்களில் காணப்படும் அங்கப்ரத்யங்களுடைய ஸ்வரூபம், இருப்பிடம், முதலியவைகள் ப்ரத்யக்ஷ விருத்தமென அவைகளைத் தள்ளி ஆங்கிலக் கொள்கைப்படி அவைகளை வர்ணித்து முதலில் ஸ்ரீ விநோதலால்ஸேன் அவர்களும் பிறகு கணநாத்ஸேன் அவர்களும் மற்றவர்களும் வடமொழியில் பல நூல்களை இயற்றியுள்ளார்கள். ஆங்கிலமறியாத பண்டிதர்கள் முற்கூறியபடி இயற்றப்பட்ட ஆயுர்வேத விக்யானம், பிரத்யக்ஷ சாரீரம், என்ற நூல்களைப் படித்து ஆங்கிலக் கொள்கைகளின் அறியாமையால் தங்களுக்கு வரும் அவமானத்தைப் பரிகரித்துக் கொள்ள சக்தியுள்ளவர்களாகின்றனர். ஆயுர்வேத விக்யானம் என்ற நூலை அடியொற்றி "சுசுருதார்த்த ஸந்தீபனம்" என்ற சுசுருத வியாக்யான நூலில் மூலவசனங்களுக்கு அர்த்தம் கூறப்பட்டிருக்கின்றது. அந்நூலில் "ஹிருதயம் என்பது வலது பக்கம் மார்பின் மூன்றாவது பர்சுகம்" (மார்பெலும்பு) தொடங்கி இடது ஸ்தனத்திற்கு இரண்டு அங்குலம் தள்ளி ஆறாவது பர்சுகம் (மார்பு எலும்பு) அளவு வியாபித்திருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. "ஹிருதயத்தின் வலது பாதியிலும் இடது பாதியிலும் கீழும்

மேலுமாக மொத்தம் நான்கு அரைகள் இருக்கின்றன" என்பன போன்றவை நவீன மதப்படி ஆயுர்வேத விக்யானம் என்ற நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹிருதயம் ரக்தத்தைக் குழாய்களில் செலுத்தும் தொழிலை இடைவிடாமல் செய்து வருவதால் விரிதல், சுருங்குதல், என்பவை ஹிருதயத்தின் இயற்கைத் தொழிலாகும். கீழும் மேலுமாக இருக்கும் ஹிருதயத்தின் நான்கு அரைகளில் மேலரைகளிலிருந்து கீழ் அரைகளுக்குப்போகும்வாயில்களில் இரண்டு இதழ்களும் மூன்று இதழ்களும் உள்ள கதவுகள் அமைந்திருக்கின்றன. ஆகவே மேல் அரைகளிலிருந்து கீழ் அரைகளுக்கும் கீழ் அரைகளிலிருந்து ரக்தக்குழாய்களுக்கும் ரக்தத்தைச் செலுத்தும்பொழுது அந்த ரக்தம் வந்த வழியில் திரும்பிப் போகாமலிருக்க இக்கதவுகள் உபயோகமாகின்றன. ஹிருதயத்தை யொட்டிய ரக்தக் குழாய்களில் ரக்தம் நுழைந்து வெளியேறும் பொழுது ரக்தம் அக்குழாய்களில் ஓர் அசைவு அல்லது துடிப்பை வியக்தமாக உண்டுபண்ணுகின்றது. இவ்விதம் ஹிருதயத்தின் நான்கு அரைகளின் சுவரும், அந்த அரைகளின் இரண்டு உள் கதவுகளும் ஹிருதயத்தை யொட்டிய பெரிய ரக்தக்குழாயின் வாயிலும் பின்ன காலமாத்ரைகளில்சலிப்பதால் ச்ரவணப்பிரத்யக்ஷத்தால் அறியக்கூடிய சப்தத்தை யுண்டுபண்ணுகின்றன. இந்த சலனசப்தத்தை ஆதியில் ஆங்கிலேயர்கள் ரோயாளியின் இடது ஸ்தனத்திற்குப் பக்கத்தில் தங்கள் காதுகளைச் சேர்த்து அறிந்து வந்தார்கள். பிறகு நாளடைவில் சௌகரியத்திற்காக கட்டை அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட ஓர் குழாயுடன் ரப்பர் குழாய்களைச் சேர்த்து ஒலிக் குழல் Stethoscope) என்ற யந்திரமாகஉபயோகித்து வருகின்றனர். ஹிருதயம் ஆரோக்ய நிலைமையில் இருக்கும்பொழுது மேலரைகள், கீழரைகள், இவைகளை யொட்டி உண்டாகும் சப்தம் "யக் டக்" என்று முறையே மெதுவாகவும், உரத்தும் இருக்கும். இவைகளுக்கும் பெரிய ரக்தக்குழாய் வாயிலில் உண்டாகும் சப்தத்திற்கும், ஹிருதயத்திலிருந்து நுரையீரல்களுக்குச் செல்லும் ரக்தக்குழாய் வாயில்களில் உண்டாகும் சப்தத்திற்கும் இயற்கையில் பேதம் காணப்படுகிகின்றது. இது முதலிய ஹிருதயம், அதன் அம்சங்கள் ஆகிய இவைகளின் அமைப்பும், அவைகளின் பலவகைப்பட்ட

தொழில்களும் அவைகளின் பரீக்ஷை முறைகளும் ஆகிய இவை யனைத்தும் பிரத்யக்ஷ சாரீரம் முதலிய நூல்களில் விவரிக்கப்பட் டுள்ளது. ஹிருதயம் ஆரோக்ய நிலைமையிலிருக்கும் பொழுது காணப்படும் சப்தம் மாறுபாட்டை யடையும்பொழுது ஹிருதயத்தில் பலவித விசேஷங்கள் ஊகிக்கப்படுகின்றன. ஹிருதயத்தின் மாறு பட்ட சப்தங்கள் பல விதங்களாகக் காணப்படுகின்றது. விஷமம், விச்சின்னம், விவிருதம், ஸம்விருதம், கோஷம், நாதம், முதலிய பலவிதங்கள் நுட்பமாக கவனிப்போருக்குப் புலப்படுகின்றன. அந்த மாறுபட்ட சப்தங்களைக் கொண்டு ஹிருதய அறைகளின் சுவர்கள், அறைகளின் கதவுகள், ரக்தக்குழாய்களின் கதவுகள், இவை முதலியவைகளில் உண்டாகும் நோய்களைக் குறிப்பிட்ட அடையாளங்களால் நிச்சயிக்கின்றனர். ஹிருதயத்தில் இச்சப்தங்கள் உண்டாவதற்குக் காரணம் இன்னும் நிச்சயப்படவில்லை. ஹிருதய சலனத்தால் ஒலி சப்தங்கள் காணும்பொழுது வாயுவின் தாக்கு தலால் தான் உண்டாகவேண்டும். கீழறைகளுக்குச் சென்ற ரக்தம் திரும்பி மேலே மேலறை வாயில் கதவுகளில் மோதுவதாலும், அவ் விதமே ஹிருதயத்திலிருந்து பெரிய ரக்தக்குழாயிலும் நுரையீரல் ரக்தக்குழாய்களிலும் செலுத்தப்படும் ரக்தம் திரும்பி அவ்வாயில் கதவுகளில் தாக்குதலாலும் இச்சப்தங்கள் உண்டாவதாக அனேக மாக நிச்சயிக்கப்படுகின்றது. ஹிருதயத்தின் அறைகளிலுள்ள ரக்தத்தைச் செலுத்துவதற்காக அதன் சுவர்கள் சுருங்குகின்றன. இவ்விதம் சுருங்கின சுவர்களுடன் கூடிய ஹிருதய அறைகளில் ரக்தம் நிறைந்து விரியும்பொழுது ரக்தநெருக்கத்துடன் கூடிய வாயு வின் தாக்குதலால் அச்சப்தங்கள் உண்டாவதாகச் சிலர் நினைக்கின்ற னர். இந்த ஹிருதய சப்தங்கள் ஹிருதய நோய்களைக் காட்டுவது போலவே சரீர முழுவதிலும் உண்டாகும் தார்பலம், தாபம், தாஹம், வீக்கம், பாகம், ஸ்தம்பம், முதலியவைகளையும் காட்டுகின்றன வென அறிவாளிகள் நினைக்கின்றனர். ஹிருதயச்சுவர், வாயில் கதவு கள், பெரிய ரக்தக்குழாய், ஆகிய இவைகளில் காணப்படும் சூக்ஷ்மமான மாறுபாடுகள் அவைகளின் வெவ்வேறு நிலைமைகளைக் காட்டுகின்றன. அந்தந்த ரோகங்களின் நிதானம், லிங்கம், ஔஷதம் இவைகளை யறிந்து சிகித்சை செய்யும்பொழுது அவ்வப்பொழுது

உண்டாகும் அல்பகுணங்களையும் அறிவதற்கு இந்த பரீக்ஷை உதவுகின்றமையால் இப்பரீக்ஷையில் தேர்ந்தவர்கள் சிறந்தவர்களென்றே கூறவேண்டும். "யக் டக், லப் டப்" என்று இந்த சப்தங்களில் முதலில் தேர்ச்சி பெற்று, ஆமை, அட்டை, அன்னபக்ஷி, இவைகளின் நடைகளைக் காட்டி நாடி நடைகளையும் அவைகளின் பேதங்களைக் கொண்டு அக்னிமந்தம், மலபந்தம், ஜ்வரம், அதிசாரம் முதலிய நோய்களையும் நாம் அறிவதுபோல தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் ஹிருதய பரீக்ஷையால் நோய்களை யறியலாமென அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. வைத்தியர்களில் பலர் ஹிருதய பரீக்ஷையால் உடனே எல்லா வியாதிகளையும் அறிந்துவிட்டதாகப் பாசாங்கு செய்து தங்களையும் பலரையும் ஏமாற்றுகின்றனர். இதை நாம் உதாஹரணமாகக் கொள்ளக்கூடாது. சில நவீனர்கள் ஹிருதய ஸ்தம்பத் (Heart failiure) தால் நோயாளி இறந்து போனதாகச் சொல்லுகின்றனர் இவ்விதம் சொல்லுவது ஓர் விதத்தில் உபகாரமே. தாறுமாறான சிகித்சையால் மரணம் நேர்ந்துவிட்டது என்று சொல்லுவதைக் காட்டிலும் "நாமென்ன செய்வோம். Heart failiure ஆல் பிராணன் போய்விட்டது" என்று சொன்னால் இறந்தவரின் பந்துக்களுக்கு ஓர் ஆறுதல் உண்டாகிறதல்லவா? இவ்விதம் ஆங்கில மதப்படி ஒலிக்குழல், பரீக்ஷையுடன் கூட ஹிருதய ரோகங்கள் பொதுவாக இங்கு சொல்லப்பட்டது. என் அறிவுக்குறைவால் சொல்ல வேண்டிய விஷயங்களை மீறிப்பேசுவதும் அவதானக்குறையும் ஸபையோர்களை விரஸப்படுத்துமென நினைத்து இனி அதிகம் கூறாமல் இந்த முக்கியமான விஷயத்துடன் நிறுத்துகிறேன். உலகத்தில் சிகித்சை "நிதான பரிஹாரமெனவும், மருந்துகள் எனவும்" இருவகைப்படும் இந்த இருவித சிகித்சை தான் ரோகநிர்ணயத்திற்குப் பலன்களாகின்றன. நாம் ரோகங்களை நிச்சயிக்கிறோம். அந்த நிச்சயத்திற்கு பலன் என்னவெனில் ரோக காரணமான நிதானத்தை விலக்குவது ஒன்றாகும். தகுந்த மருந்துகளைக் கொடுப்பது மற்றொன்றாகும். நவீனர்களுடைய ஒலிக்குழல் பரீக்ஷை மூலம் உண்டாகும் ரோக நிர்ணயம் இந்த இருவித சிகித்சா முறைகளிலும் விசேஷித்த பலனை யளிப்பதில்லை. அதிக பலம், துர்பலம், சாத்தியம்,

அசாத்தியம், இது முதலிய ரோக நிலைமைகளைச் சொல்லுவதில் ஓர் குதூஹலத்தைக் கொடுக்கின்றது. இந்த ஒலிக்குழலின் உதவியால் நுரையீரல்களில் பிராணவாயு ஸஞ்சாரத்தால் உண்டாகும் சப்தத்தை அறிவதால் மார்பு, நுரையீரல்கள், ஆமாசயம், இவை முதலியவைகளில் உண்டாகும் நோய்களை அறியலாமென்ற விஷயம் பிரகிருதத்திற்கு உபயோகமில்லாமலிருப்பதாலும் ஹிருதயரோகத்திற்குச் சமமானதாலும் இங்கு சொல்லப்படவில்லை.

பிராசீனர்களுக்கும் நவீனர்களுக்கும் கொள்கையில் உள்ள விசேஷங்கள்—ஹிருதயத்தை அவலம்பித்துப் பின் அதன் ரோகங்களை நாம் விசாரிக்க வேண்டும். ஆகவே ஆயுர்வேத நூல்களில் சொல்லப்பட்ட ஹிருதயம் எது? என்பதை விசேஷித்து கவனிக்க வேண்டும். அதிலும் நவீனர்கள் பிரத்யக்ஷமாகக் கண்டு பிடித்த உள் உறுப்புகளின் விவரணமும், பிராசீனர்கள் நூல்களில் சொல்லப்படும் உள் உறுப்புகளின் இருப்பிடம், ஸ்வரூபம், இவை முதலியவைகளின் விவரணமும் வெவ்வேறுபட்டது என்பதை முதலில் நாம் கவனத்தில் வைக்கவேண்டும். முக்குணங்கள் பொருந்திய மூலப் பிரகிருதி, மஹத், அஹங்காரம், தன் மாத்திரங்கள், மஹாபூதங்கள், இந்திரியங்கள், சப்தாதி விஷயங்கள், எனக்கிரமமாக ஸ்தூலப் பிரபஞ்சத்தின் பரிணாமரீதியை ஸாங்கியர்கள், வைசேஷிகர்கள், இவர்கள் மதப்படி சொல்லிவிட்டு மகாபூதங்கள் ஜீவன் இவைகளின் சேர்க்கையைப் புருஷன் என வர்ணித்துப் பிறகு மகாபூதங்களின் பலவித சேர்க்கையால் குரு, மந்தம், முதலிய இருபது குணங்களையும், அக்குணங்களுக்கு ஆச்ரயமான திரவ்யங்களையும் பிரித்துச் சொல்லி பஞ்சமகாபூதங்களால் உண்டாகும் திரவ்யங்களில் "ஸௌம்யம், ஆக்னேயம், வாயவ்யம்," என்ற முக்ய பேதங்களையும் விளக்கி, ஆயுர்வேதக் கொள்கைப்படி திரிதோஷங்களை ஜகத்திற்கு உபாதான காரணமாக வியவஸ்தை செய்து மனித சரீரம் திரிதோஷாத்மகமென விவரிக்கும் முன்னோர்களுடைய கொள்கை புலனாகும் வஸ்துக்களில் திரிதோஷங்களின் குணங்களையொட்டி லிங்கங்களை அனேகமாகக் காட்டுகின்றது. கண்ணுக்குப் புலப்படாத பிரகிருதி, புருஷன் பூதாதிகளை அனுஸரித்துப் பலவகைப்பட்ட வஸ்துக்களில் பின்னிக்கிடக்கும் ஜாதி, குணம், இவை முதலிய

பேதங்களையும், திரிதோஷங்களையும் மூலமாகக் கொண்டு ஆயுர்வேத மியற்றிய முன்னோர்கள் ஸ்தூலதிரவ்யங்களுடைய ஸ்வரூபம், இருப்பிடம், எண்ணிக்கை, இவை முதலியவைகளில் அதிக கவனம் செலுத்தவில்லை யென்பது ஆச்சரியமாகாது. திரிதோஷங்களுக்கு இலக்காகும் ரஸாதி ஸப்ததாதுக்கள், மலங்கள், அவைகளின் இயற்கை லக்ஷணங்கள், விகார லக்ஷணங்கள், ஆகிய இவைகள் தேசகாலங்களை யொட்டிப் பலவிதங்களாவதாகப் பெரியோர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட ஸம்ஸ்காரத்துடன் கூடிய மனதுடன் கூடி சக்ஷுராதி இந்திரியங்கள் ப்ரத்யக்ஷப் பிரமாண காரணங்களெனப்படுகின்றன. இந்திரிய கோசரங்களான திருச்ய வஸ்துக்கள் மனதை யொட்டிய பற்பல விகல்பங்களால் நிர்மாணிக்கப்பட்டு வியவஹார விஷயங்களாகின்றன. ஆகவே பெரியோர்கள் கூறியுள்ள திரிதோஷங்கள், தாதுக்கள், மலங்கள், அவைகளுடன் கலந்துள்ள சரீரத்தின் உறுப்புகள் ஆகிய இவைகள் அவர்களால் பிரத்யக்ஷமாக அனுபவிக்கப்பட்டவை என்பதில் ஆக்ஷேபமில்லை, நன்கு யோசிக்குங்கால் அந்த கஜந்யாயத்தால் எல்லா மதங்களுமே புலனாகும் வஸ்துக்களைப்பற்றி மாத்திரம் கூறுவதால் பிரத்யக்ஷம் கூட பலவிதமாக ஆகின்றது. புலனாகாத சூக்ஷ்ம விஷயங்களில் விசேஷித்து இவ்விதம் நேருகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே நவீனர்களுடையவும் ப்ராசீனர்களுடையவும் பிரத்யக்ஷங்களில் மாறுபாடுகள், இயற்கையே. அறிபவன், அறியப்படும் வஸ்து, இவை முதலிய காரணபேதத்தாலும், தனித்தனி பலன்கள் இருப்பதாலும், இவர்களுடைய மத மாறுபாடுகள் தனித்தனி பலன்களையுடையதாக விருப்பதால் இந்த இருவகைப் பெரியோர்களுடைய கொள்கைகளும் ஒருபொழுதும் பொய்யாகாது. இவ்விதம் சரீரத்துள் இருக்கும் உறுப்புகளுடைய புலனாகும் அம்சங்களில் அதாவது நிறம், உருவம், கனம், இலகு, இருப்பிடம், எண்ணிக்கை, அமைப்பு, ஆகிய இவை முதலியவைகளில் நம் முன்னோர்கள் கொள்கை நவீனர்கள் கண்டுபிடித்துள்ளவைகளை யனுசரித்திருக்கவில்லையென்ற தூஷணமும், தற்காலம் நமக்குக் கிடைத்துள்ள போலீ ஆயுர்வேத நூல்

களின் ஆசிரியர்கள் சாரீர தத்வம் அறியாதவர்களென்றும், சாரீர தத்வம் நன்கு அறிந்த உண்மையான சரக சுச்ருத நூல்களை கடல் விழுங்கிவிட்டதால் அவைகள் நமக்கு துர்லபமாயின வென்றும், அந்தக் கடல் விழுங்கிய நூல்களே உண்மையான நூல்கள் என்ற பூஷணமும், அனுவசியமென்பது என் எண்ணம். சரக சுச்ருத வாக்பட நூல்களில் சாரீர விசாரத்தின் ஆரம்பத்திலேயே முற்கூறியபடி ஜகத்காரணத்தை நிரூபித்துப் பிறகு சுக்லம், ஆர்த்வம்,கர்போத்பத்தி அதன் பரிணமம், என்ற வரிசையாக அங்கப்ரத்யங்க ஸ்வரூபமும் மாதா பிதிருக்களிடமிருந்து சிசுவுக்குக் கிடைக்கும் தாது குண பேதங்களும், பிரகிருதி பேதங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. சரக சாரீரத்தில் அத்யாத்மதத்வம் மிக அத்புதமாக வர்ணிக்கப் பட்டிருந்த போதிலும் சுசுருதத்தில் சொல்லப்பட்ட பௌதிக சாரீரதத்வம் ஆயுர்வேதத்திற்குத் தேவையான வளவு சொல்லப் பட்டிருப்பது பற்றி "சாரீரே ஸுசுருத: ச்ரேஷ்ட:" சாரீரத்தில் ஸுசுருதர் உயர்ந்தவரெனப் பெரியோர்கள் மதிக்கலாயினர். "சோதயித்வா மிருதம் ஸம்யக் த்ரஷ்டவ்யோங்க விநிச்சய:" பிணத்தை நன்றாகப் பரீக்ஷித்து உறுப்புகளைப் பற்றிய நிச்சயத்தை அறியவேண்டுமென்ற சுசுருத வசனம் நவீனர்கள் காணும் பிரத்யக்ஷப்பிரகாரத்தை அவலம்பித்து விதித்திருப்பதாக நினைக்கக் கூடாது. சவபரீக்ஷையை விதிக்கும் மேற்படி சுசுருதவசனம் சவத்தைப் புல் கயிறுகளால் சுற்றி நதீப்பிரவாஹத்தில் வைத்துப் பரீக்ஷிக்க வேண்டுமென்று கூறுவதால் அவ்வசனம் ஸ்தூல உறுப்பு களின் விஷயமென நினைக்கிறனர். சவபரீக்ஷையைச் சொல்லி யிருப்பதால் அப்பரீக்ஷையால் அறியப்படும் விஷயங்களைக் கூறு வதில் மாத்திரம் சுசுருதருக்கு நோக்கமிருப்பதாக நினைக்கக்கூடாது. பிரத்யக்ஷத்தால் நாமே தெரிந்துகொள்ளக் கூடிய விஷயங்களைப் பிரதானமாக சாஸ்திரம் சொல்லுவதில் பிரயோஜனமில்லை. இந்திரியங்களுக்குப் புலப்படாத குணங்கள் தொழில், காரணம்.கார்யம், இவைகளைச் சொல்லுவதால் தான் சாஸ்திரங்களுக்கு சாஸ்திரத் தன்மை ஸித்திக்குமென்பது முன்னோர்கள் கொள்கை. பிரத்யக்ஷத் தில் தெரிவதை எல்லா ஜனங்களும் தானாகவே சாஸ்திர உதவி யில்லாமல் அறிந்து கொள்ளலாம். அவ்விதம் இந்திரியங்களால்

அறியமுடியாத விஷயங்களை விளக்குவது தான் சாஸ்திரங்களின் நோக்கமென்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆகவே (பிரத்யக்ஷத்தால் எல்லோரும் அறியக்கூடிய விஷயங்களில்) சில உறுப்புகளுக்குப் பெயரையும், சில உறுப்புகளுக்கு இருப்பிடத்தையும், சிலவற்றிற்கு நிலையையும், சிலவற்றிற்கு குணம் தொழில் இவைகள் மாத்திரத்தையும், சிலவற்றிற்கு வேறொன்றில் அந்தர்பாவத்தையும் சிலவற்றிற்குப் பொதுவான விமர்சத்தையும், சில உறுப்புகளில் பெயர், பேதம், எண்ணிக்கை, இவைகளில் அநாதரவையும், சிலவற்றிற்குப் பெயர் வைத்த காரணங்களில் தவறுதலையும் இது போன்ற மற்றவைகளையும் நாம் நமது நூல்களில் கண்ட போதிலும் குற்றமாகாதொழிகின்றது. திரிதோஷங்களைக் காரணமாகக் கண்ட நமது முன்னோர்கள் ஆயுர்வேத நூல்களை இயற்றுவதற்கு வேண்டிய உபகரணங்களில் மாத்திரம் கவனம் கொண்டவர்களாகிப் பிரத்யக்ஷப் பிரமாணத்தால் உண்டான அனுபவத்தையொட்டி வரும் அனுமானங்களைக்கைக்கொண்டனர். சவபரீக்ஷையை சுசுருதர் விதித்திருப்பதால் நவீனர்களுடைய பிரத்யக்ஷ ஆராய்ச்சிகளை அந்தந்த நவீன நூல்களிலிருந்து தெரிந்து கொண்டு சிகித்சையில் அவைகளை உபயோகித்துக் கொள்ளுவதும் சுசுருதருக்கு சம்மதம் தான் என்பது வேறு விஷயம். சப்தங்கள், அர்த்தங்கள் இவைகளில் ஏற்படும் மாறுதலும் வியவஹாரமும்— உலகத்தில் காணப்படும் வஸ்துக்களின்ஸம்க்யைகளுக்குப் புலனாகும் வஸ்துக்களின் வெளித்தோற்றம், பரீக்ஷித்து அறிந்த தர்மபேதங்கள், பரீக்ஷகர்களின் அனுபவத்திற்கு விஷயமாகும் மாறுபாடுகள், பிற்கால அனுபவத்திற்கு யோக்யங்களான கல்பித பாவங்கள் ஆகிய இவை காரணங்களாகின்றன. அறிபவன், காலம், தேசம், ஆகிய இவற்றின் பேதத்தால் முற்கூறியவை பலவிதமாக பேதப்படுகின்றன. வஸ்துக்களுக்குப் பெயரும், உருவமும், கூடும்பொழுது ஏற்படுகிற இந்த நியதியானது உலகவியவஹாரத்திற்கும் சாஸ்திரோபதேசங்களுக்கும் பொதுவானதே. ஆகையால் தான் உலகவழக்கத்திலுள்ள சப்தங்களுக்கும், சாஸ்திரங்களிலுள்ள சப்தங்களுக்கும், ஒவ்வொரு சப்தத்திற்குப் பற்பல பொருள்களும் ஒரு பொருளுக்குப் பல சப்தங்களும் காணப்படுகின்றன. ஓர் ஸங்கேதத்தை யவலம்

பித்து வரும் சப்தங்களுடைய ஸ்வரூபவ மாறுதலும் அந்த சப்தங்களுடைய பொருள்களைத் திரித்துக் கூறுதலும் சாஸ்திர தாத்பர்யத்தைத் தலைகீழாக்கி விடுமாதலால் அவ்விடத்தில் நமது பிரயத்க்ஷமும் லௌகிக வியவஹாரமும் பிரமாணமாகமாட்டாது. மேல் நாட்டாருடைய சாரீர விக்யானத்திலிருந்தே இங்கு உதாஹரணம் சொல்லலாம். சுத்த ரக்தம் ஓடுகிற தமனி என்ற குழாய்களுக்கு ஆங்கிலத்தில் "ஆர்டரி" என்கின்றனர். இப்பெயர் பழைய காலத்தில் கொடுக்கப்பட்டது. இன்றைக்கும் இப்பெயர் வழங்கி வருகிறது. ஆர்டரி என்ற பதம் "வாயுநாடீ" என்ற பொருளைக் கொடுக்கின்றது. சுத்த ரக்தக்குழாய்களுக்கு இப்பெயரை முன்னோர்கள் ஏன் கொடுத்தனர் என்றால் சவபரீக்ஷையில் ஷை குழாய்கள் சூன்யமாக விருந்ததால் அதை யொட்டி வாயுநாடீ என்ற அர்த்தத்தைக் கொடுக்கும் 'ஆர்டரி' என்ற பெயரைக் கொடுத்தனர். பிறகு பரீக்ஷிக்கும் பொழுது ஷை குழாய்களில் சுத்த ரக்தம் ஓடுவது தெரியவந்தது. தெரிந்த பிறகு பெயரை மாற்றி விடவேண்டியது அவசியமாகிலும் மாற்றவில்லை. அவ்விதமே "மலேரியா" என்ற பதத்திற்கு அழுக்கடைந்த (கெட்ட) வாயுவால் உண்டாகியது என்பது பொருள். ஆதியில் மலேரியா காய்ச்சல் கெட்ட வாயுவால் உண்டாகியதாக நினைத்து அப்பொருளைக் கொடுக்கும் மலேரியா என்ற பதத்தால் அழைத்தனர். தத்காலம் பரீக்ஷையால் ஷை காய்ச்சல்களுக்குக் கொசு காரணமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பரீக்ஷைக்குப் பிறகு மலேரியா என்ற பதத்தை மாற்றுவது அவசியமாக இருந்தும் மாற்றவில்லை காரணமென்ன? அடிக்கடி பெயர்களை மாற்றுவதால் குழப்பம் உண்டாகும் என்பதே. பரிணாமி வஸ்துக்களில் ஒவ்வொன்றையும் கிருஹிதாக்கள் தங்கள் தங்கள் மனோபாவத்தை யொட்டி பற்பல விதமாக கிருஹிக்கின்றனர். அவரவர் கிருஹிப்பதை யொட்டி வஸ்துக்களின் பெயரையோ சப்தத்தின் பொருளையோ மாற்றுவதென ஏற்படில் பாஷையே மடிய நேரிடும். உலக வியவஹாரமும் அழிந்து போகும். ஹிருதயம் சேதனாத்மகம், நவீனர்களுக்கும் பிராசீனர்களுக்குமுள்ள மதவேற்றுமை—கீழ் சொன்ன தத்வத்தை நாம் மனதில் கொண்டு நமது நூல்களில்

கூறப்பட்ட ஹிருதயம் என்பது என்ன என்பதை ஆலோசிப்போம். சுருதிகளில் இந்த ஹிருதய சப்தமானது "ஹிருத் அயம்" என்று பிரிக்கப்பட்டு பரமாத்ம வாசகமாகக் கூறப்படுகின்றது. "ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹிருத் தேசே அர்ஜுனதிஷ்டதி" என்று கீதையில் இந்த ஹிருதய சப்தம் பரமாத்மாவுக்கு ஆதாரமாகக் கூறப்பட்டுஹிருதயம்வேறு பரமாத்மா வேறு எனப்படுகின்றது "அங்குஷ்ட மாத்ர: புருஷ:" என்றவசனத்தில் ஹிருதயத்தை ஆச்ரயித்திருப்பவன் ஜீவாத்மாவெனக் கூறப்படுகின்றது. ஸர்வாங்கங்களிலும் வியாபித்துள்ள சைதன்யத்திற்கு ஹிருதயம் அபிவியக்தி ஸ்தானமென சில இடங்களில் கூறப்படுகின்றது. சேதநாத் மகமான மனதை ஹிருதயமெனச் சில இடங்களில் சொல்லப்படுகின்றது. ஆகவே ஹிருதயம் என்ற சொல் உள் உறுப்புகளில் ஒன்றைக் குறிப்பதுடன் மாத்திரம் நிற்காமல் அந்தக் காரணத்தின் தர்மம் அல்லது சக்தியையும் குறிப்பதாகப் பல பிரயோகங்களால் ஏற்படுகின்றது. உள் உறுப்புகளுக்குள் முன் சொன்ன தர்மம் அல்லது சக்தியின் காரணத்தை அனுமானத்தால் அறிந்தமது ஆயுர்வேதாசார்யர்கள் அதன்பிரகிருதி லிங்கம்; இவைகளை உபதேசிக்க விரும்பி 'ஹிருதயம் தாமரைப் புஷ்பத்திற்குச் சமர். அது தலை கீழாக விருக்கிறது. விழித்திருக்கும்பொழுது அது மலருகின்றது. தூங்கும் பொழுது சுருங்குகின்றது' என்றும் "ஹிருதயம் ஓஜஸ்ஸுக்கு இருப்பிடம்" என்றும் "அதற்குக் கீழும் இடது பக்கத்திலும் ப்லீஹா', புப்புஸம், என்ற உறுப்புகளும் அதற்கு வலது பக்கத்தில் யக்ருத், க்லோம, என்ற உறுப்புகளும் இருக்கின்றன" என்றும் "இவைகள் உண்டுகம், மூத்திரக்குண்டிக்காய், குடல்கள், ஆகிய இந்த உறுப்புகளுடன் சேர்ந்து ரக்தாசயம், கபாசயம், ஆமாசயம், இவைகளைப்பற்றி நின்று கோஷ்டம் எனப்படுகின்றது" என்றும், கூறுகின்றன. மேலும் 'ஹிருதயம், ஸத்வம் முதலியவைகளுக்கு இருப்பிடம்" ஸ்தனங்கள், மார்பு, கோஷ்டம், இவைகளுக்கு நடுவில் இருக்கின்றது" "ஆமாசயத்வாரம்" "இரண்டங்குல அளவுள்ளது", "உள்ளங்கை அளவுள்ளது" "ஆக்னேயம்", "ஸிராமர்மம்", "ஹிருதயம் சரீரத்தில் தாதுக்களின் இடைவெளியாகியும், ஆமாசயம் முதலிய சொற்களால் குறிப்பிடப்படுவதாயுள்ள ஸ்ரோதஸ்ஸுக்களில்

ஒன்றாகும்" என்றும் பற்பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கின்றனர். முற்கூறிய வசனங்களால் ஸ்தனங்கள், மார்பு, கோஷ்டம், இவைகளுக்கு நடுவில் இரண்டங்குல அளவுள்ளதாயும் உள்ளங்கை, யளவு இடைவெளியுள்ளதாயும் இருப்பது ஹிருதய ஸ்தானமென்றும், முக்கிய மர்மஸ்தானமானதால் அதில் அடிபட்டால் உடனே மரணமெனவும் அறிகிறோம். மார்பின் இடது பக்கத்தில் அமைந்தும் நவீனர்களால் Heart என்று அழைக்கப்படுவதுமான உறுப்பினுடைய வலது பக்கம் சற்று வளைந்துள்ள பாகமே ஆயுர்வேத நூல்களில் கூறப்படுவதும் மஹாமர்மஸ்தானத்தின் இடை வெளியிலுள்ளதுமான ஹிருதய புண்டரிகமென நாம் நிச்சயித்தால் அப்பொழுது நவீனப்பிராசீனமதங்கள்சுகமாகப் பொருந்திவிடுவதைக் கண்டு சந்தோஷிக்கலாம். அவ்விதம் நாம் நினைக்கமுடியுமா? பல அம்சங்களில் ஆயுர்வேதமும் நவீனக்கொள்கையும் முறண்படுகின்றன ஆகவே பண்டிதர்களின் அபிப்பிராய ஒற்றுமையையும், பக்ஷாந்தரத்தைப் பற்றியவர்களின் அபிப்பிராய வேற்றுமையையும் தடஸ்தர்களின் ஜியாஞபிவிருத்தியையும் பலனைக் கருதி இவ் விஷயத்தை இங்கு விசாரிக்கின்றோம்.

ஹிருதயத்தின் இருப்பிடம், ஸ்வரூபம், தொழில், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சி—உலகத்தில் பரம்பரையாக வந்துள்ள சப்த சக்தி கிரஹணத்தால் மனிதனுக்கு பிரத்யக்ஷத்தில் புலனாகும் வஸ்துக்களில் பரிசயம் உண்டாகின்றது. சாஸ்திரங்களில் சொல்லப்படும் அப்பிரத்யக்ஷ வஸ்துக்களின் பரிசயம் குரூபதேசத்துடன் கூடிய ஆராய்ச்சியால் ஏற்படுகிறது ஆகவே "ஹிருதயம் என்பது என்ன?" என்று அதன் உருவம், இருப்பிடம், தொழில், இவைகளை நான் ஆராயும்பொழுது பிரத்யக்ஷம், சாஸ்திரம், இவைகளில் சொல்லப்பட்ட லக்ஷணங்களை அவலம்பித்து அவைகளை நான் இங்கு காட்டப்போகிறேன். ஹிருதயத்தின் உருவம் தலைகீழாக யுள்ள புண்டரிகத் (வெண்தாமரை புஷ்ப) திற்குச் சமம் என சொல்லப்படுவதால் மேலே தண்டும் பல இதழ்களும்உள்ளது என்று ஏற்படுகிறது. வெண்தாமரையின் மொக்கு(மலராத வெண்தாமரை புஷ்பம்) என்ற பக்ஷத்தில் மேலே தண்டும் சுருங்கிய இதழ்களும் உள்ளது (ஹிருதயம்) என ஏற்படுகிறது. (இது நமது சாஸ்திரங்

களை ஒட்டியது) நவீனர்கள் சொல்லும் ஹிருதயத்தின் உருவத்தில் மேலே தண்டுடன் கூடியது என்ற அம்சத்தை ஹிருதயத்தில் மேல் பாகத்திலுள்ள ரக்தக்குழாய்கள் வளைந்திருந்த போதிலும் மேல் நோக்கியிருக்கின்றன என்ற பாகத்தைக் கொண்டு கஷ்டப்பட்டுப் பொருத்தவேண்டும். அது மாத்திரமல்ல. வெண்தாமரை போன்றது என்ற முன்னோர் வசனத்தில் "வெளுப்பு" என்ற அம்சத்தையும் தள்ளிவிட வேண்டும். இனி பல இதழ்கள் உள்ளது என்ற முன்னோர் அபிப்பிராயத்தைக் கவனிப்போம். இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் மேலும் கீழுமுள்ள அறைகளின் நான்கு பிரிவுகளை யொட்டிய அறைகளின் சுவர்களை இதழ்களாகக் கொள்ளுவது சற்றும் பொருத்தமல்ல. மேலும் வாக்படர் முதலானோர் ஹிருதயத்திற்கு "ஸுஷிரம்" என மற்றொரு அதிகப்படி லக்ஷணம் கூறுகின்றனர். ஸுஷிரம் என்ற பதம் பள்ளம் அல்லது பொந்து என்ற பொருளைக் குறிப்பதாகும். நவீனர்கள் கொள்கையில் இந்த அதிகப்படியான லக்ஷணம் காணப்படவில்லை. சவ பரீக்ஷையில் ஹிருதயத்தைப் பிளந்து பார்த்தால் பொந்து அல்லது பள்ளம் தெரிவது உண்மையே. ஆனால் இது ஜீவ சரீரத்திலுள்ள ஹிருதயத்திற்குப் பொருந்துமெனக் கொள்ள வழியில்லை. தவிர தாமரைக்கு ஒப்பிட்ட முன்னோர்கள் அபிப்பிராயத்தில் புஷ்பம் மலருவதும் சுருங்குவதும் போல ஹிருதயமும் மலருவதையும் சுருங்குவதையும் உடையது என ஏற்படுகின்றது. தாமரையின் உவமையால் ஹிருதயத்தில் புலப்படும் ஸங்கோச விகாஸங்களும் நவீனர்களின் மதத்தில் காணப்படவில்லை. நவீனர்கள் சொல்லும் ஹிருதயத் துடிப்பை ஸங்கோச விகாஸங்களெனக் கொள்வதும் கிலேச கல்பனையே. பிராசீனர்கள் கூறும் ஹிருதயத்தின் இருப்பிடமும் நவீனர்கள் சொல்லும் இருப்பிடமும் பொருந்துவது கஷ்டமாக விருக்கின்றது. மூல பாகம், உறுப்பின் உருவம், புலப்படும் அம்சம், நாலாபக்கங்கள், ஆகிய இவைகளைச் சொல்லுவதால் தான் இருப்பிடம் நன்கு விளங்கும். ஹிருதயத்தின் நுனியிலுள்ள குவிந்த பாகம் என்கிற அடையாளத்தைக் கொண்டு ஹிருதயத்தை உறுதிப்படுத்தலாமாகிலும் ஹிருதயத்தின் இருப்பிடத்தை உறுதிப்படுத்த அது

போதுமானதாகாது. ஒரு வஸ்துவின் இருப்பிடத்தை விளக்குவதற்காக அதன் சமீபத்திலுள்ள மற்ற வஸ்துக்களைச் சொல்லி அதன் சமீபத்திலுள்ளது என்று இருப்பிடத்தைக் காட்டுவதுமுண்டு. ஹிருதயத்தின் கீழே இடது பக்கத்தில் ப்லீஹா என்ற உறுப்பானது சாஸ்திரங்களாலும் பிரத்யக்ஷத்தாலும் அறியப்படுகின்றது. அது நவீனர்கள் சொல்லும் Diaphragm என்ற மஹாபிராசீரிகா என்ற உறுப்பைத் தாண்டி கீழே யிருப்பதாக ஒப்புக்கொள்ளப்படுமாகில் "ப்ராசீரிகா என்ற உறுப்பு மார்பின் கீழ் எல்லை" என்கிற நவீன மதம் விரோதிக்கும் புப்புஸம் (நுரையீரல்) என்ற உறுப்பு ஹிருதயத்தின் கீழே இடது பக்கத்தில் மார்பின் குஹையை ஆச்ரயத்திருப்பதாக நூல்கள் கூறுகின்றன. அவ்விதம் ஓர் உறுப்பு நமக்குப் பிரத்யக்ஷத்தில் காணமுடியவில்லை. "புப்புஸ" என்று சப்தமிடுவதால் அந்த உறுப்புக்கு அப்பெயர் கொடுக்கப்பட்டதென வேறு இடங்களில் ஏற்பட்ட சப்த அனுபவத்தைக் கொண்டு ஆமாசயம் என்று உறுப்புதான் அது எனக் கொள்வதும் முன் சொன்ன மார்பு குஹையின் எல்லையைப் பற்றியவிவாதத்தைக்கிளப்புமாதலால் இதை ஒப்புக்கொள்ள முடியாது. மேலும் இந்த புப்புஸம் என்ற பதம் ஓர் பரிபாஷை பதமாதலால் அந்த பரிபாஷையில் நமக்குப் பரிசயம் இல்லாமலிருப்பதால் இப்பதம் நமக்கு ஓர் பொருளைக் குறிக்க சக்தியற்றதாக விருப்பதால் இதைக் கொண்டு நமக்கு விளங்காத ஹிருதயத்தின் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்வது சாத்தியமில்லை. ஹிருதயத்தின் வலது பக்கத்திலிருப்பதாகக் கூறப்படும் யகிருத் என்ற உறுப்பு மார்பு குஹையைத் தாண்டி யிருப்பதாகக் கொண்டால் ப்லீஹாவுக்குச் சொன்ன தூஷணங்கள் இங்கும் ஸம்பவிக்கும். க்லோமா என்ற உறுப்பும் நமக்கு விளங்காததே. இந்த க்லோமா என்ற வஸ்துவுக்குத் திலகம் என்ற மற்றொரு பெயர் காணப்படுகின்றது. திலம் என்ற எள்ளைப் போன்றது என்பதால் எள்ளுபோல் க்லோமா என்ற வஸ்து எண்ணைப் பசையை யுண்டுபண்ணுவது என்றும் எள்ளு போன்று சிறிய அளவுள்ள ஓர் துண்டுடன் கூடியதெனவும் சிலர் சொல்லுகின்றனர்.

(தொடரும்)

# சித்தர் முறை.

(பண்டிட் நாராயணய்யங்கார் எழுதியது)

தத்காலம் கிடைப்பவைகள் தகடுகளாக பெயர்க்கக் கூடியவை யல்ல. இருந்த போதிலும் இதைத்தான் உபயோகிக்க வேண்டி யிருக்கிறது. கோதந்ததாளகம் என்பது மூன்றாவது வகை. இது மங்கலான வெண்மையுடைய கட்டிகளாக விருக்கின்றது. பத்ர தாளகம் போல இது தகடுகள் அமைந்ததல்ல. இதைப்பத்ரதாளகத் திற்கு அடுத்தபடியாகப் பெருமைப்படுத்தி நூல்கள் கூறுகின்றன. ரஸரத்னஸமுச்சயம் போன்ற முன் நூல்களில் இதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆயுர்வேதப் பிரகாசம் போன்ற பின் நூல் களில் கோதந்த தாளகம் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது— சித்தர்கள் அபிப்பிராயப்படி தாளகத்தில் பத்ரதாளகம் மிகவும் உயர்ந்தது. அதற்கு அடுத்தது கோதந்த தாளகம் என்பதே ஆகவே பத்ரதாளகம் அல்லது கோதந்த தாளகம் ஆகிய இரு வகைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளலாம். இந்த வஸ்துவுக்குப் பல குணங்கள் இருப்பதாக நூல்கள் கூறுகின்றன. நாம் அனுபவித்த மட்டில் இதன் பல குணங்களைப் பூர்ணமாக ஒப்புக்கொள்ள வேண்டியதே. நூல்களில் கூறப்பட்டுள்ள ரஸம் முதலிய வஸ்துக்களில் தாளகத்திற்குச் சமமான வஸ்து கிடையா தெனவே சொல்லலாம். அப்பிரகத்தின் பெருமையை நாம் குறைத்துப் பேசமுடியாது. இருந்த போதிலும் தாளகத்தின் ஒப்பற்ற மேன்மையை மறைக்க முடியாது. க்ஷயம், குஷ்டம், நுமோனியா, காய்ச்சல், மேகத்தை யொட்டிய வியாதிகள், ஆகிய இவைகளில் இது நிகரற்று விளங்குகின்றது. தைவியாதிகளில் வேறு எந்த மருந்தும் தாளகத்திற்கு நிகராக முடியாது. நரை யீரல்களில் காணும் புண் Inflamation இவைகளை மிகச் சீக்கிரமாக குணப்படுத்துகின்றது. சரீரத்தில் காணும் மேகப்பற்றுகள் முதலியவைகளை நன்கு குணப்படுத்துகின்றது. இருமல்களில் நன்கு குணம் கொடுக்கின்றது. ஆனால் ஆஸ்த்மாவில் இது பலனை யளிப்பதில்லை. ரக்தவாந்தி மிகுந்து இருக்கும் க்ஷயநோய்களில் இது மாத்திரம் தனித்து குணம் கொடுப்பதில்லை. அந்த வகை

நீங்கலாக மற்ற க்ஷயநோய்களின்வகையனைத்திலும்இதுவியாதியைப் பூர்ணமாகக் குணப்படுத்துகின்றது. ஆகவே க்ஷய்நோய்களில் இது முக்கிய மருந்தாகின்றது. இம்மருந்தால் குணமாகிய பிறகு அந்த நோய் திரும்பி வருவதில்லை க்ஷயநோய்களில் சில சந்தர்ப் பங்களை யொட்டி வேறு மருந்துகளையும் இதோடு சேர்த்துக் கொடுக்க வேண்டும். இதைத் தனித்தும் அல்லது கூட்டு மருந்து களுடன் சேர்த்தும் கொடுக்கலாம். நூல்களில் சொல்லப்படும் எல்லா மருந்துகளிலும் அனேகமாகத் தாளகம் சேருகின்றது. தமிழ் நூல்களிலும் இது விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ் நூல்களில் தாளகம் சேர்ந்த கூட்டு மருந்துகள் மிகச்சுவல்பமே. இதில் களிம்பு இருப்பதால் நன்ருகச் சுத்தி செய்யவேண்டும். சுத்தி செய்து பச்சையாக அப்படியே கூட்டு மருந்துகளில் சேர்க் கின்றனர். அவ்விதம் சேரும் கூட்டு மருந்துகள் இருவகைப்படும். எரிப்பு வகை ஒன்று. அதாவது தாளகத்தையும் மற்ற மருந்து களையும் சேர்த்துக் குப்பியில் அடைத்துச் சீலை மண் செய்து சில யாமம் அல்லது நாள் வாலுகாயந்திரத்தில் எரித்து எடுப்பதாகும். இந்த வகை ஆயுர்வேத நூல்களிலும் தமிழ் நூல்களிலும் காணப்படு கின்றது. இவ்வகையைப் பலரும் செய்து வருகின்றனர். மற்ற மருந்துகளுடன் சேர்த்து அரைத்து உபயோகிப்பது இரண்டாவது வகையாகும். இந்த இரண்டாவது வகையையும் பலர் செய்து உபயோகிக்கின்றனர். ஆனல் இந்த இரண்டாவது வகையில் தாளகம் நல்ல குணம் கொடுப்பதில்லை. தாளகபஸ்மம் கொடுக்கும் குணத்தில் சிறியவளவு குணம் கூட பச்சை தாளகம் கொடுப்பதில்லை ஆனல் துர்குணம் மாத்திரம் செய்கின்றது. நன்ருகச் சுத்தி செய்து விட்ட போதிலும் கூட பச்சைத்தாளகம் வாந்தி முதலிய துர்குணங்களைக் கட்டாயம் கொடுக்கின்றது. ஆகவே பச்சைத் தாளகத்தில் குணமில்லாமலும் துர்குணம் மிகுந்தும் இருப்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இதைக் கண்டுதான் பலர் தாளகம் என்றுல் பயப்படுகின்றனர். உண்மையில் தாளகத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. அதைப் பஸ்மமாகச் செய்து விட்டால் துர்குணம் மிகவும் குறைந்து விடுகின்றது. இரண்டு மாதக் குழந்தை முதல் 70 வயதானவர்கள் வரை நாம் பல தட்வை

களில் பல நோய்களில் மாதக்கணக்காகக் கொடுத்தும் துர்குணமே கிடையாதென்றும் எதிர்பார்க்கும் குணங்கள் குறைவின்றியிருப்பதையும் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். சில சமயங்களில் சற்று துர்குணம் காணப்படுமாகில் இரண்டு நாட்களுக்கு மருந்தை நிறுத்தினால் துர்குணம் மறைந்து விடுகின்றது. மறுபடியும் முன் போலவே கொடுக்கலாம். தாளகபஸ்மத்தை நாம் பல வருஷங்களாக உபயோகித்ததில் காணப்பட்ட துர்குணங்களைக் குறிப்பிடுகிறோம். சுமார் 60 வயதுள்ள ஒருவர் ஆஸ்த்மா நோயால் வருந்தி வந்தார். சுமார் முப்பது வருஷங்களாக அவருக்கு அந்த நோய் துன்பம் அளித்து வந்தது. அவருக்குத் தாளகபஸ்மம் கொடுக்கப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு அவருடைய இரண்டு கால்களிலும் சற்று வீக்கம் ஏற்பட்டது. வேறு துர்குணங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இந்த வீக்கம் தாளகபஸ்மத்தால் இருக்கலாமோ என்று சந்தேகித்து மருந்தை நிறுத்தியதில் 2, 3, நாளில் வீக்கம் பூர்ணமாகத் தானே மறைந்து விட்டது. இந்த ஒரு நபரைத் தவிர மற்றெவருக்கும் இம்மாதிரி துர்குணம் உண்டாகவில்லை. ஆகவே இந்த துர்குணத்திற்கு வேறு ஏதாவது காரணமிருக்கலாமோ என்று நினைக்கும்படியிருந்தது. மற்ற கேசுகளில் சிலருக்குக் குமட்டல் இருந்தது. சாதாரணக் குமட்டல்களில் மருந்தை நிறுத்தாமலே கொடுத்து வந்ததில் சில நாட்களில் மருந்து உடம்புக்கு ஒத்துப்போய் துர்குணமின்றியிருந்தது Leprosy என்ற குஷ்ட நோயில் கொடுத்த பொழுது ஆரம்பத்தில் சில நாட்களில் உள்ளங்கால்களில் எரிச்சல் கண்டு உள்ளங்கால்களில் ஓர் தோல் கழண்டு விட்டது. வியாதி பூராவும் குணமடைந்தது மேற்படி நோயாளிக்கு ஆங்கில சிகிச்சையில் நூறு இன்ஜக்ஷன் கொடுத்தும் குணமின்றி சில வருஷங்கள் கழித்துப் பிறகு தாளகபஸ்ம சிகிச்சை கொடுக்கப்பட்டது. ஓர் க்ஷயநோயில் தாளகபஸ்மம் கொடுத்து வந்ததில் மலம் இளகி, பேதியாக தினம் மூன்று அல்லது நான்கு தடவை கழிந்தது. இரண்டு நாள் மருந்தை நிறுத்தினவுடன் அந்த துர்குணம் விலகிவிட்டது. பல வருஷங்களாக நாம் உபயோகித்து வந்ததில் மேலே சொன்ன துர்குணங்களே காணப்பட்டன. பலருக்கு ஒரு வித துர்குணமும் காணப்படவில்லை. குஷ்ட நோய்களில் முதல்

மாதத்திலேயே குணம் ஆரம்பிக்கின்றது. நோய்க்குத் தக்கபடி ஆறு மாதம் முதல் ஒரு வருஷம் வரை உபயோகிக்க வேண்டியதாகின்றது. க்ஷயரோகங்களில் ஆறு மாதம் உபயோகிக்க வேண்டியதாகின்றது. சாதாரண இருமல்களில் 15 நாள் முதல் ஒரு மண்டலம் வரை உபயோகிக்க வேண்டியதாகின்றது. தாளகசுத்தி—தாளகத்தைக் கடலைபோல நறுக்கி ஓர் துணியில் கட்டி காடியில் சுண்ணாம்புக்கல் கலந்து அதில் தோலாயந்திரமாகத் தொங்கவிட்டு ஒரு யாமம் எரிக்கவும். பிறகு பூசணிக்காய் ரஸத்திலும், திரிபலை கஷாயத்திலும், நல்லெண்ணெயிலும் ஒரு யாமம் எரிக்கவும். நல்லெண்ணெயில் எரிக்கும் பொழுது ஜலத்தைக் கலந்து எரிக்கவும், இல்லாவிட்டால் நல்லெண்ணெயில் தீபற்றி தாளகம் எரிந்துவிடும். குறிப்பு—நூல்களில் இவ்விதம் கூறப்பட்ட போதிலும் நாம் அனுபவத்தில் செய்து வரும் முறையாவது—சுண்ணாம்புக்கல்லை ஓர் சட்டியில் சுமார் அரைப்படி போட்டு அதில் முன் சொன்னபடி தாளகத்தை ஓர் துணியில் முடிந்து இரண்டு படி பச்சை ஜலம் விட கொதிக்கும். கொதி ஆறின பிறகு அடுப்பேற்றி இரண்டு மணி எரித்து ஆறவிட்டு துணிக்குள்ளிருக்கும் தாளகத்தை நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும். தாளகபஸ்மம்—(1) புரசம்வேர் கஷாயம் செய்து அந்தக் கஷாயத்தை வடிகட்டி ஓர் பாண்டம் அல்லது இரும்பு சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்து தேன்போல கெட்டியாக ஆகும் பதத்தில் எடுத்துக் கொண்டு அதால் தாளகத்தை மூன்று தடவை பாவனை செய்து பிறகு அந்த தாளகத்தை எருமை மூத்திரத்தில் அரைத்து வில்லைதட்டி அகலில் வைத்து முழுவதும் சீலைமண் செய்து பத்து எருவில் புடமிடவும். இவ்விதம் பத்து புடமிட பஸ்மமாகும். குறிப்பு—இந்த மாதிரியான லகுபுடங்களில் முடியும் பஸ்மங்கள் நெருப்பில் போட்டால் புகையும். தாளகபஸ்மத்திற்கு லக்ஷணம் ஆயுர்வேதப் பிரகாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "தாளம் ம்ருதம் ததா க்யேயம் வஹ்நிஸ்தம் தூமவர்ஜிதம் | ஸதூமம் நம்ருதம் ப்ராஹு: விருத்தவைத்யா இதி ஸ்திதி; ||" தாளக பஸ்மத்தைத் தணலில் போட்டால் புகைவாமலிருந்தால் அது உயர்ந்த பஸ்மமாகும். புகை வருமாகில் அது சரியான பஸ்மமல்ல என்பது பெரியோர்களின் கொள்கை என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

# திராவிட வைத்திய மண்டலம்.

ஷை மண்டலத்தின் ஸ்தாயிசமிதிக்கூட்டம் 17—12—41-ல் திருச்சியில் ஷை மண்டல உப அத்யக்ஷர் ஆயுர்வேதாசார்ய V. B. நடராஜசாஸ்திரி அவர்கள் தலைமையில் கூடிக் கீழ் கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1. அகில பாரத ஆயுர்வேத வித்யாபீடத்தில் நியமிக்கப்பட்ட சப்கோர்க்க ஸமிதியானது காசியில் 1941 டிசம்பர் கடைசிவாரத்தில் கூடப்போவதால் அவர்களுடைய முடிவைக் கவனித்துக்கொண்டு அதன்மேல் "சர்க்கார் இந்திய வைத்திய பள்ளிக்கூடத்தின்" பாடக்கிரமத்தைப்பற்றி திராவிட வைத்திய மண்டலம் 11-வது ஸம்மேளனத்தில் ஏற்பாடு செய்த பாடக்ரம கமிட்டியின் விஷயம் ஆலோசனை செய்வதாக தீர்மானிக்கப்பட்டது.

2. மண்டலத்தின் நியமங்களைப் படித்துப்பார்த்து ஆவசிய மான பரிவர்த்தனங்களையும் சிபார்சு செய்து அச்சடிக்கும்படியான நிலைமையில் தயாரித்துக்கொடுக்க ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரி, ஸ்ரீ S. L. நீலகண்டசர்மா, ஸ்ரீ V. ராமசுப்ரமணிய அய்யர் இவர் களடங்கிய ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டது. காரியதரிசி.

# திருச்சி ஆயுர்வேத ஸபா.

ஷை ஸபாவின் மாதாந்தரக்கூட்டம் திருச்சி ஆயுர்வேதம் யூனியன் கட்டிடத்தில் 30—11—41உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஆரம்பமாயிற்று ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரிகள் ஆயுர் வேதாசார்ய அவர்கள் தலைமை வஹித்தார்கள். 'டைபாய்டு" என்று வழங்கும் ஜ்வரத்தைப்பற்றி ஆயுர்வேத ஸித்தாந்தப்படி விரிவான சர்ச்சை நன்று நடந்தது. ஸபாமெம்பர்களெல்லோரும் ஆஜராக இருந்தார்கள். மாலை 6 30-மணிக்கு கூட்டம் வந்தனோப சாரங்களுடன் முடிவுற்றது.

V. R. SUBRAMANIA AIYAR,
காரியதரிசி.

"Wanted 30 paid agents in Madura District on a salary of Rs. 30–2½–50 per mensem under **P. A. Ramaswami Iyengar**, Branch Manager of the Indian Investment Trust Limited Ottapalam.

Apply to:–**P. A. Ramaswami Iyengar,**

Branch Manager,

Indian Investment Trust Limited,

Door No. 7,

*No. 2, Police Station West Lane,*

*Madura.*

## ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—42.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |